# இனமானப் பேராசிரியர் நினைவு வாழ்க!



குன்றமைந்த தடந்தோள்கள்! பரந்த மார்பு!
குவிந்துறைந்த பேரறிவின் படர்ந்த நெற்றி!
நின்றுயர்ந்த செம்மாப்பு! புரட்சிப் பாட்டு
நெருப்புமிழ்ந்த பாவேந்தன் நடைச்செ ருக்கு!
வென்றெழுந்த தமிழ்வீறு! வெளிச்சப் பார்வை!
வெற்றிலைவாய்ச் சிதறாத புன்சி ரிப்பே!
அன்றிருந்தார்! வாழ்கின்றார் இன்றும் நம்முள்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

முறுவல்பூத் தொளிர்கின்ற எழிலைப் பார்த்தும்
முழக்கமிட்டு வருகின்ற செயலைப் பார்த்தும்
நிறைதொண்ணூற் றாறுவய தான போதும்
நிமிர்ந்துவந்த பொலிவுகண்டும், இளமை என்ன
சிறைவைக்கப் பட்டதுவா? எனவி யந்தோம்!
சிந்திக்கப் பிறந்தமகன்! ஆன்றோ ருக்கும்
அறிவுப்பால் பொழிந்ததமிழ் அமுதக் கிண்ணம்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

கொட்டாவித் தமிழனைத்தன் விடியல் ஓசைக்
குரலாலே துயிலெழுப்பும் மேடைப் பேச்சு!
கட்டான காளையர்தம் கையில் ஏந்திக்
கலாச்சார யுத்தத்தில் குதிப்ப தற்குப்
பட்டாளப் படைக்கலன்கள் அவரின் சொற்கள்!
பாமரர்க்கும் கல்விஒளி பாய்ச்சி வைத்தே
அட்டியின்றி வரலாற்றில் நிலைத்த செம்மல்!
அவர்தாம்"பே ராசிரியர்" வணங்கு கின்றோம்!

ஒப்புவமை இல்லாத உயர்பண் பாளர்!
ஒழுக்கநெறி நிறைந்தகுறட் சீலர்! நாட்டின்
தட்பவெப்ப சூழ்நிலைக்குத் தக்க வாறு
தமைமாற்றிக் கொள்ளாத கொள்கை வீரர்!
நட்பினுக்கோர் இலக்கணம்யார்? என்று கேட்டால்
நாடே"பே ராசிரியர்" எனமு ழங்கும்!
அப்பழுக்கில் லாதபகுத் தறிவுச் செம்மல்!
ஐயாநம் அன்பழகர் நினைவு வாழ்க!

கொற்றவன்போல் நடந்துவரும் கம்பீ ரத்தில்
கோட்டிமயம் தோற்றுவிடும்! தனது தோளில்
பற்றியுள்ள துண்டைத்தோள் மாற்றிப் போடும்
பாவனையில் பறிபோகும் பார்ப்போர் உள்ளம்!
அற்றகுளத் தின்பறவைக் கூட்ட மெல்லாம்
அகன்றோடும்! மீண்டும்வரும்! எண்ப தாண்டாய்
உற்றதுணை யாய்கலைஞர் அருகில் வாழ்ந்த
உன்னதப்பே ராசிரியர் நினைவு வாழ்க!

சோகமுட்கள் வேலாகத் தைத்த போதும்
சுடர்முகத்தில் ஒளிகுறையாக் கலைஞர் நெஞ்சில்
வேகம்,விசை யாய்மிளிர்ந்த வெப்பம் ஆனார்!
விழுதுகளின் வேரானார்! வெயில்பட் டாலே
காகிதப்பூ நிறம்மாறும்! நிலைமா றாத
கழகத்தின் குறிஞ்சிப்பூ வானார்! எந்தச்
சாகசமும் அவர்முன்னே தோற்றுப் போகும்!
சாயாத இலட்சியத்தின் உருவம் ஆனார்!

பல்லக்குத் தூக்கிகளும், பாதம் தாங்கிப்
பதவிசுக மோகிகளும் பறந்த நாளில்
சொல்லுக்கும் செயலுக்கும் வடிவம் தந்தே
சோதனையில் கழகத்தை மீட்கும் போரில்
புல்லர்க்குப் புலியாகி எதிர்த்து நின்ற
போர்க்குணத்தை மறப்போமோ? கழகத் தோழர்
இல்லத்தில் உள்ளத்தில் நிறைந்து வாழும்
இனமீட்புத் தூதுவரின் நினைவு வாழ்க!

ஈன்றார்க்குப் புகழ்சேர்த்த பெரியார் பிள்ளை!
இயக்கத்தில் அண்ணாவின் இனிய தம்பி!
தோன்றாநல் துணையானார் "தளப தி"க்கே!
தொண்டர்நம் தாய்மொழிக்கே! எமக்கோ ஆசான்!
ஆன்றோர்தம் சிந்தையிலே அன்புத் தோழர்!
அரசியலில் மாற்றாரும் போற்றி நின்ற
சான்றாளர்! தலைவர்கலை ஞருக்கு "மூத்த
சகோதரர்" பே ராசிரியர் நினைவு வாழ்க!

**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**



பாலாகத் தேனாகப் பழச்சா றாகப்
பருகும்இள நீராகப் போர்க்க ளத்தின்
வேலாக வாளாக ஈட்டி யாக
விரைந்துவரும் துப்பாக்கித் தோட்டா வாக,
மாலாக வைக்காமல், மயக்கம் தீர்க்கும்
மருந்தாக அறிவுவிருந் தாக, ஞான
நூலாகப் பீடுநடை போட்ட, எங்கள்
"நோற்றவப்பே ராசிரியர்" நினைவு வாழ்க!!

---

ஜோலார் பேட்டை கிழக்கு ஒன்றியத்தில்

## நிதிநிலை விளக்க தெருமுனைப் பிரச்சாரம்!

### உமா கன்ரங்கம் - திருப்பத்தூர் ரஜினி சிறப்புரை!

திருப்பத்தூர், மார்ச் 9 -

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் சார்பில் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் சின்னகம்பியபட்டு , பொன்னேரி, மண்டலவாடி, செட்டியப்பனூர் பெத்தகல்லுபள்ளி ஆகிய ஊராட்சிகளில், மண்டல வாடி ஊராட்சியில் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

ஒன்றியக் கழகச் செயலாளர், கவுன்சிலர் க. உமா கன்ரங்கம் தலைமையில், ஆசிரியர் கோபிநாதன் பொன்னுசாமி வரவேற்பில், தலைமைக் கழக பேச்சாளர் திருப்பத்தூர் ரஜினி சிறப்புரையாற்றினார்.

இதில் மாவட்ட துணை செயலாளர் சம்பத்குமார், தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் தேவகுமார், பொதுக்குழு உறுப்பினர் சத்தியநாராயணன், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் சுரேஷ், சி.எஸ். செந்தில்குமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர், துணை செயலாளர் வைரமணி, பொருளாளர் திருப்பதி, பாலாஜி மாவட்ட பிரதிநிதி சாமுடி, செயற்குழு உறுப்பினர்கள் ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர், பொது மக்கள் கலந்து கொண்டனர், இளைஞர் அணி அமைப்பாளர் சிவகுமார் நன்றி கூறினார்.

---

திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

## வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் -கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், வடமதுரை, குஜிலியம்பாறை ஆகிய இரண்டு ஒன்றியங்கள், வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

மேற்சொன்னவாறு பிரிக்கப்படும் ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கீழே குறிப்பிட்டுள்ளவர்கள் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**வடமதுரை கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.வேலாயுதம்பாளையம், 2.கானப்பாடி, 3.மோர்பட்டி, 4.புத்தூர், 5. சுக்காம்பட்டி, 6.சித்துவார்பட்டி, 7.கொம்பேறிபட்டி, 8.சிங்காரகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் அய்யலூர் பேரூர்.

**வடமதுரை கிழக்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர்: ஆ.பாண்டி**
மாலப்பட்டி, காணப்பாடி அஞ்சல்,
வேடசந்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

**வடமதுரை மேற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.பாகானத்தம், 2. பிலாத்து, 3.தென்னம்பட்டி, 4.கொசவபட்டி, 5.குளத்தூர், 6.பாடியூர், 7.வேல்வார்கோட்டை, 8.சிங்காரகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் வடமதுரை பேரூர்.

**வடமதுரை மேற்கு ஒன்றியம்**

**செயலாளர் : போ. சுப்பையன்**
தூங்கணம்பட்டி,
பாகநத்தம் அஞ்சல்,
வேடசந்தூர் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

**குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.திருக்கூர்ணம், 2.ஆர்.வெள்ளோடு, 3.ஆலம்பாடி, 4.கோட்டானத்தம், 5.தோளிப்பட்டி, 6.கருங்கல், 7.டி.கூடலூர், 8.லந்தகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் பாளையம் பேரூர்.

**குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம்**

**செயலாளர் : சு.சீனிவாசன்**
காந்தி நகர், சத்திரப்பட்டி அஞ்சல்,
குஜிலியம்பாறை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்

**குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.புதுக்கோட்டை, 2.ஆர்.கோம்பை, 3.வடுகம்பாடி, 4.வாணிக்கரை, 5.சின்னலுப்பை, 6.உல்லியகோட்டை, 7.மல்லப்புரம், 8.கூம்பூர், 9.கரிக்காலி ஆகிய 9 ஊராட்சிகள்.

**குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர்: மா.ராஜலிங்கம்,**
ரெட்டியபட்டி,
ஆர்.கோம்பை,
குஜிலியம்பாறை வட்டம்.
திண்டுக்கல் மாவட்டம்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.3.2024) முகாம் அலுவலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

---

இதுவரை ரூ.5 கோடியே 95 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் கல்வி உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வந்தது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 95 லட்சத்து 90 ஆயிரம்.** இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/–** (இரண்டு லட்சம்) **07–03–2024** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | இரா.தென்னவன்,<br>21, கீழத் தெரு, நெடுவாக்கோட்டை, திருவாரூர்614 014. | 25,000/– |
| 2. | இரா.பாலு, எம்.ஜி.ஆர்.நகர்,<br>சோமூர் அஞ்சல், மண்மங்கலம், கரூர் மாவட்டம். | 25,000/– |
| 3. | எஸ். குணசேகரன்,<br>அக்ரகாரம் தெரு, மணமேல்குடி, புதுக்கோட்டை மாவட்டம். | 25,000/– |
| 4. | ஒய்.பி.அசோக்குமார்,<br>ஏத்தாப்பூர் அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம்– 636 117. | 25,000/– |
| 5. | ஆர். சின்னதுரை,<br>கருந்தேவன்பாளையம், காடச்சநல்லூர், நாமக்கல்–638 008. | 25,000/– |
| 6. | எஸ்.சிலம்பரசன்,<br>சிக்களூர் கிராமம்அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி–636906. | 25,000/– |
| 7. | வே. வேடியப்பன்,<br>ஒட்டப்பட்டி கிராமம், காவேரிபட்டினம் வழி கிருஷ்ணகிரி | 25,000/– |
| 8. | மு.மாரியப்பன்,<br>காந்தி மாநகர், பீளமேடு, கோவை–641 004. | 25,000/ – |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

---

ரூ. 2.73 கோடி மதிப்பீட்டில்

## கள்ளக்குறிச்சி பொதுப்பணித்துறை கோட்ட அலுவலகத்தின் புதிய கட்டிடம்!

### அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்!

கள்ளக்குறிச்சி, மார்ச் 9 -

கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பிரிதிவி மங்கலத்தில் கள்ளக்குறிச்சி பொதுப்பணித்துறை கோட்ட அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை பொதுப் பணிகள்,நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, மாவட்ட ஆட்சித் தலைவர் ஷ்ரவன் குமார், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன்,சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன், உளுந்தூர் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு பல்வேறு அரசு துறை கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டத்தின் அடிப்படையில் பல்வேறு அரசு துறை அலுவலக கட்டிடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு வருகிறது, அதன்படி கள்ளக்குறிச்சி பொதுப்பணித்துறை கோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 2.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமான பணிகள் முடிவுற்றது,இக்கட்டிடத்தின் தரைத்தளத்தில் நுழைவு அறை, மின் தூக்கி அறை,வரவேற்பறை, பாதுகாப்பாளர் அறை,வாகனம் நிறுத்துமிடம்,அதே போல் முதல் தளத்தில் உப கோட்ட அலுவலகம்,உப கோட்ட அலுவலர் அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறை,இரண்டாம் தளத்தில் செயற்பொறியாளர் அறை, வரை தொழில் அலுவலர் அறை, வரைவு பிரிவு, கோட்டக்கணக்கர் அறை, கணக்கர் பிரிவு, கோட்ட அலுவலக பதிவறை, கணினி அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறை ஆகியவை இடம் பெற்றுள்ளது.

புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி பொதுப்பணித்துறை கோட்ட அலுவலகத்தினை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். இதன் பின்னர் மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடன் அலுவலகத்தின் அனைத்து தளங்களுக்கும் நேரடியாக சென்று பார்வையிட்டு உடனடியாக அலுவலகமாக பயன்படுத்திட பொதுப்பணித் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் முதன்மை தலைமை பொறியாளர் (பொது) சத்தியமூர்த்தி, தலைமை பொறியாளர் ஆயிரத்தரசு ராஜசேகரன், சிறப்பு தலைமை பொறியாளர் வெங்கடாசலம், செயற்பொறியாளர் ஹேமா, உதவி செயற்பொறியாளர் மாலா,மாவட்ட ஊராட்சி குழுதலைவர் புவனேஸ்வரி பெருமாள்,அனைத்து ஒன்றிய குழு பெருந்தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.